# அமிர்தா பல்கலை.யில் 2 நாள் சர்வதேச மாநாடு




கருத்தரங்கில் விழா மலரை வெளியிடும் (இடமிருந்து) பேராசிரியர் கே.எம்.மினி, ஸ்பெயின் நாட்டு பேராசிரியர் ஆலன் பேட்மேன், பேராசிரியர் கே.வெங்கட்ரமணா, அமிர்தா பதிவாளர் கே.சங்கரன், பேராசிரியர்கள் டி.ஜி.சீதாராமன், எஸ்.மாதவகுமார், கே.பி.ஆனந்த், சியா சென் சியான்.

**கோவை, ஏப். 26:** கோவை அமிர்தா பல்கலைக்கழகத்தில் முன்னணி பொறியியல் வல்லுநர்கள் பங்கேற்ற 2 நாள் சர்வதேச மாநாடு அண்மையில் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பேரழிவைத் தடுக்கும் விதமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்புகளில் நிலையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்தான இந்தக் கருத்தரங்குக்கு பதிவாளர் கே.சங்கரன் தலைமை தாங்கினார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கட்டுமான, சுற்றுச்சூழல் பொறியியல் துறை பேராசிரியர் சியா சென் சியான், பெங்களூர் இந்திய அறிவியல் கழக கட்டுமானப் பொறியியல் துறை பேராசிரியர் சீதாராம், ஸ்பெயின் நாட்டுப் பேராசிரியர் ஆலன் பேட்மேன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். பல்கலைக்கழகத்தின் கட்டுமானப் பொறியியல் துறைத் தலைவர் கே.எம்.மினி, பேராசிரியர்கள் வெங்கடரமணா, டி.ஜி.சீதாராம், மாதவகுமார், கே.பி.ஆனந்த் உள்ளிட்டோர் கருத்தரங்கில் உரையாற்றினர். இதில், இந்தியா, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, குவைத் உள்ளிட்ட நாடுகளில் பொறியியல் துறையில் சிறந்து விளங்கும் 150-க்கும் மேற்பட்ட முன்னணி கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.